# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1717/21 - 2011 අගෝස්තු 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.08.04

*1717/21 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ- 3/2011.*

**2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம்**

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2011, ஓகத்து 04.*

ஒழுங்குவிதிகள்

*1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க. பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (இதனகத்துப்பின்னர் இவ்வொழுங்குவிதிகளில் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவரும், ஆரம்ப அறிவித்தலொன்றைக் கோப்பிடுவதற்கு விரும்புகின்றவருமான உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் அல்லது பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட, கடனாளி ஒருவர், 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், அத்தகைய அறிவித்தலைப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்கு இலத்திரனியல் முறைமை மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

**அட்டவணை I**

ஆரம்ப அறிவித்தலின் படிவம்

| கடனாளியின் விபரங்கள் | | |
|---|---|---|
| கடனாளி வகை | | |
| வதிவந்தஸ்து | | |
| கடனாளி இனங்காட்டு இலக்கம் | | |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| கடனாளியின் பெயர் | | |
| கடனாளியின் முகவரி | | |
| | | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் விவரங்கள் | | |
| | | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் வகை | | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் | | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரி | | |
| துணைமைப்பொருளின் விவரணம் | | |
| | | |

**குறிப்புகள் :**

*(i)* கடனாளி வகை என்பது, ஒன்றில் 'தனிப்பட்டதாக அல்லது 'கூட்டிணைக்கப்பட்ட குழுவாக' இருக்கலாம் ;

*(ii)* வதிவந்தஸ்து என்பது, ஒன்றில் 'உள்நாட்டினதாக' அல்லது 'வெளிநாட்டினதாக' இருக்கலாம் ;

*(iii)* கடனாளி இனங்காட்டு இலக்கம் என்பது, ஒன்றில் 'தேசிய அடையாள அட்டை இலக்கமாக (தே. அ. அ.) அல்லது 'கடவுச்சீட்டு இலக்கமாக' அல்லது 'வியாபாரப் பதிவு இலக்கமாக' இருக்கலாம் ;

*(iv)* பெயரானது, தேசிய அடையாள அட்டையில் (தே. அ. அ.) அல்லது கடவுச்சீட்டில் தோன்றுகின்றவாறான முழுப்பெயராக அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழிலுள்ள கூட்டிணைப்புப் பெயராக இருத்தல் வேண்டும் ;

*(v)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் வகை என்பது, ஒன்றில் 'தனிப்பட்டதாக' அல்லது 'ஒழுங்கமைப்பாக' இருக்கலாம் ;

*(vi)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம், இடாப்பின்மூலம் (க.த.ப.) வழங்கப்படுதல் வேண்டும் ;

*(vii)* துணைமைப்பொருளின் விவரணம் என்பது, துணைமைப்பொருளின் (அசைவுள்ள சொத்து) விரிவான விவரணம் என்று பொருளாகும் .

3. பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்பில் கோப்பிடப்பட்ட ஆரம்ப அறிவித்தலுக்கு திருத்தமொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரொருவர் அல்லது வேறெவரேனுமாள், II ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், இலத்திரனியல் முறைமை மூலம், பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்கான திருத்தத்துக்காக அத்தகைய அறிவித்தலைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை** II

ஆரம்ப அறிவித்தலுக்கான திருத்தமொன்றின் அறிவித்தலினது படிவம்

| | |
|---|---|
| ஆரம்ப அறிவித்தல் இலக்கம் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் விபரங்கள் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயர் | |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| | |
|---|---|
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரி | |
| கடனாளி விபரங்கள் | |
| கடனாளி இனங்காட்டு இலக்கம் | |
| கடனாளியின் பெயர் | |
| கடனாளியின் முகவரி | |
| துணைமைப்பொருளின் விவரணம் | |
| | |
| அதிகாரமளிக்கும் தரப்பினரின் பெயர் | |
| | |

**குறிப்புகள் :**

*(i)* ஆரம்ப அறிவித்தல் இலக்கம் என்பது, ஆரம்பப் பதிவில் இடாப்பின்மூலம் வழங்கப்பட்ட கோப்பிலக்கம் என்று பொருளாகும் ;

*(ii)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் பெயர் இடாப்பின்மூலம் வழங்கப்படலாம் ;

*(iii)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் இடாப்பின்மூலம் வழங்கப்படலாம் ;

*(iv)* துணைமைப்பொருளின் விவரணம் என்பது, துணைமைப்பொருளின் விரிவான விவரணம் என்று பொருளாகும் ;

*(v)* கடனாளி இனங்காட்டு இலக்கம் என்பது, ஒன்றில் 'தேசிய அடையாள அட்டை இலக்கம் (தே. அ. அ.) அல்லது 'கடவுச்சீட்டு இலக்கம் (க. சீ. இ.)' அல்லது 'வியாபாரப் பதிவு இலக்கம் (வி. ப. இ.) என்று பொருளாகும் ;

*(vi)* பெயரானது தே. அ. அட்டையில்/கடவுச்சீட்டில் உள்ள முழுப் பெயராக அல்லது வியாபாரப் பதிவில் உள்ள ஒழுங்கமைப்புப் பெயராக இருத்தல் வேண்டும் .

4. பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்பில் கோப்பிடப்பட்ட ஆரம்ப அறிவித்தலொன்றைத் தொடர்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், ஆரம்ப அறிவித்தலைக் கோப்பிட்டதிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதி முடிவுறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், இலத்திரனியல் முறைமை மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்குத் தொடர்ச்சிக் கூற்றொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

**அட்டவணை** III

தொடர்ச்சிக்கூற்றின் படிவம்

| | |
|---|---|
| ஆரம்ப அறிவித்தல் இலக்கம் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் விபரங்கள் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் | |

**அட்டவணை** III (தொடர்ச்சி)

| | |
|---|---|
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயர் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரி | |
| கடனாளி விபரங்கள் | |
| கடனாளி இனங்காட்டு இலக்கம் | |
| கடனாளியின் முழுப்பெயர் | |
| கடனாளியின் முகவரி | |
| துணைமைப் பொருளின் விவரணம் | |
| | |
| செல்லுபடியாகும் காலப்பகுதி | |
| எக்காலப்பகுதியிலிருந்து | |
| எக்காலப்பகுதிவரை | |

**குறிப்புகள் :**

(i) ஆரம்ப அறிவித்தல் இலக்கம் என்பது, இடாப்பின்மூலம் வழங்கப்பட்ட கோப்பிலக்கம் என்று பொருளாகும்.

(ii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயர், இடாப்பின்மூலம் வழங்கப்படலாம்.

(iii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம், இடாப்பின்மூலம் வழங்கப்படலாம்.

(iv) துணைமைப்பொருளின் விவரணம் என்பது, துணைமைப்பொருளின் விரிவான விவரணம், என்று பொருளாகும்.

(v) கடனாளி இனங்காட்டு இலக்கம் என்பது, ஒன்றில் 'தேசிய அடையாள அட்டை இலக்கமாக '/ (தே. அ. அ.) அல்லது 'கடவுச்சீட்டு இலக்கமாக (க. சீ. இ.)' அல்லது 'வியாபாரப் பதிவு இலக்கமாக (வி. ப. இ.) இருக்கலாம்.

(vi) பெயரானது, தேசிய அடையாள அட்டையில்/கடவுச்சீட்டில் தோன்றுகின்றவாறான உள்ள முழுப் பெயராக அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழிலுள்ள கூட்டிணைப்பு பெயராக இருத்தல் வேண்டும் .

(vii) எக்காலப்பகுதியிலிருந்து எக்காலப்பகுதிவரை என்பது, இடாப்பின்மூலம் வழங்கப்படலாம்.

5. பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்பில் கோப்பிடப்பட்ட ஆரம்ப அறிவித்தலொன்றின் பதிவை முடிவுறுத்துவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், IV ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இலத்திரனியல் முறைமை மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்குத் அப்பொருள்பட அறிவித்தலொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை** IV

ஆரம்ப அறிவித்தலொன்றை முடிவுறுத்துவதற்கான அறிவித்தலின் படிவம்

| | |
|---|---|
| முடிவுறுத்துகைக்கான அறிவித்தல் | |
| அறிவித்தல் இலக்கம் | |
| விவரணம் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் சம்மதம் பெறப்பட்டுள்ளதாவென்பது | |

**குறிப்புகள் :**

*(i)* *அறிவித்தல் இலக்கமானது இடாப்பின்மூலம் வழங்கப்படும் கோப்பிலக்கமாகவுள்ளது.*

*(ii)* *விவரணமானது, முடிவுறுத்துகைக்கான காரணங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.*

6. துணைமைப்பொருளொன்றினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் கிடைக்கக்கூடியமை தொடர்பாக ஏதேனும் தகவலைப் பெறுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், இலத்திரனியல் முறைமை மூலம் அத்தகைய தகவலை வெளிவிடுமாறு வேண்டுகோள்விடுத்து, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை V**

கடனொன்று தொடர்பான தகவலைப் பெறுவதற்கான படிவம்

| | |
|---|---|
| அறிவித்தல்மூலம் தேடுகையிடுதல் | |
| ஆரம்ப அறிவித்தல் இலக்கம் | |
| கடனாளியினால் தேடுகையிடுதல் | |
| கடனாளி இனங்காட்டு இலக்கம் | |
| கடனாளியின் முழுப்பெயர் | |
| தேடுகைக்குச் சட்டமுறையான காரணம் | |

**குறிப்புகள் :**

*(i)* *ஆரம்ப அறிவித்தல் இலக்கம் என்பது, ஆரம்பப் பதிவில் இடாப்பின்மூலம் வழங்கப்பட்ட கோப்பிலக்கம் என்று பொருளாகும் ;*

*(ii)* *கடனாளி இனங்காட்டு இலக்கம் என்பது தேசிய அடையாள அட்டை இலக்கம் (தே. அ. அ.) அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது வியாபாரப் பதிவு இலக்கம் என்று பொருளாகும் ;*

*(iii)* *பெயரானது தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச்சீட்டில் தோன்றுகின்ற முழுப்பெயராக அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழிலுள்ள கூட்டிணைப்பு பெயராக இருத்தல் வேண்டும் .*

7. சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விளைவாகப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பின் மூலம் தகவல் வெளிவிடப்படுதலானது VI ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

**அட்டவணை VI**

தகவல் வெளிவிடுவதற்கான படிவம்

| | |
|---|---|
| ஆரம்ப அறிவித்தல் இலக்கம் | |
| அந்தஸ்து | |
| அறிவித்தல் முடிவுறும் திகதி | |
| தொடங்கும் திகதி | |
| முடியும் திகதி | |
| கடனாளி விபரங்கள் | |
| கடனாளி வகை | |

**அட்டவணை** VI *(தொடர்ச்சி)*

| | |
|---|---|
| வதிவந்தஸ்து | |
| கடனாளி இனங்காட்டு இலக்கம் | |
| கடனாளியின் முழுப்பெயர் | |
| கடனாளியின் முகவரி | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் விபரங்கள் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் வகை | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் | |
| உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரி | |
| துணைமைப் பொருளின் விவரணம் | |

**குறிப்புகள்** :

*(i)* கடனாளி வகை என்பது, ஒன்றில் 'தனிப்பட்டதாக'/ அல்லது 'ஒழுங்கமைப்பாக' இருக்கலாம் ;

*(ii)* வதிவந்தஸ்து என்பது, 'உள்நாட்டினதாக' அல்லது 'வெளிநாட்டினதாக' இருக்கலாம் ;

*(iii)* கடளாளி இனங்காட்டு இலக்கம் என்பது, ஒன்றில் 'தேசிய அடையாள அட்டை இலக்கமாக (தே. அ. அ.) அல்லது 'கடவுச்சீட்டு இலக்கமாக' (க. சீ. இ. ) அல்லது 'வியாபாரப் பதிவு இலக்கமாக' (வி. ப. இ.) இருக்கலாம் ;

*(iv)* பெயரானது, தேசிய அடையாள அட்டையில் (தே. அ. அ.) அல்லது கடவுச்சீட்டில் தோன்றுகின்றவாறான முழுப்பெயராக அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழிலுள்ள கூட்டிணைப்புப் பெயராக இருத்தல் வேண்டும் ;

*(v)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் வகை என்பது, ஒன்றில் 'தனிப்பட்டதாக' அல்லது 'ஒழுங்கமைப்பாக' இருக்கலாம் ;

*(vi)* உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் இனங்காட்டு இலக்கம் இடாப்பின்மூலம் வழங்கப்பலாம் ;

*(vii)* துணைமைப்பொருளின் விவரணம் என்பது, துணைமைப்பொருளின் ஒரு விரிவான விவரணம் என்று பொருளாகும் ;

*(viii)* ஆரம்ப அறிவித்தல் இலக்கமானது ஆரம்பப் பதிவில் இடாப்பின் மூலம் வழங்கப்படும் கோப்பிலக்கமாகவுள்ளது ;

*(ix)* அந்தஸ்து, தொடக்கத் திகதி, முடிவுத் திகதி என்பன இடாப்பின்மூலம் வழங்கப்படலாம்.

8. ஒரு தீர்ப்புக் கடன்கொடுநரின் அக்கறையொன்று பற்றிய ஆரம்ப அறிவித்தலைக் கோப்பிடுவதற்கு விரும்புகின்ற ஆளொருவர் VII ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இலத்திரனியல் முறைமைமூலம், அத்தகைய அறிவித்தலைப் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் இடாப்புக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை** VII

தீர்ப்புக் கடன்கொடுநரொருவரின் ஓர் அக்கறை பற்றிய ஆரம்ப அறிவித்தலின் படிவம்

| | |
|---|---|
| தீர்ப்புக் கடன்கொடுநர் விபரங்கள் | |
| தீர்ப்புக் கடன்கொடுநர் வகை | |
| வதிவந்தஸ்து | |
| தீர்ப்புக் கடன் கொடுநர் | |
| இனங்காட்டு இலக்கம் | |

**அட்டவணை** VII *(தொடர்ச்சி)*

| | |
|---|---|
| பெயர் | |
| முகவரி | |
| தீர்ப்புக் கடன் பெறுநர் விபரங்கள் | |
| தீர்ப்புக் கடன்பெறுநர் வகை | |
| தீர்ப்புக் கடன்பெறுநர் | |
| இனங்காட்டு இலக்கம் | |
| தீர்ப்புக் கடன் பெறுநரின் முகவரி | |
| | |
| தீர்ப்பின்/அளிப்பின் விவரணம் | |
| வழக்கில்.<br>நீதிமன்றத்தின் விவரணம்<br>தீர்ப்பின் சுருக்கம் | |

**குறிப்புகள் :**

*(i)* தீர்ப்புக் கடன்கொடுநர் வகை என்பது ஒன்றில், 'தனிப்பட்டதாக' அல்லது 'கூட்டிணைக்கப்பட்ட குழுவாக' இருக்கலாம் ;

*(ii)* வதிவந்தஸ்து என்பது ஒன்றில் 'உள்நாட்டினதாக' அல்லது 'வெளிநாட்டினதாக' இருக்கலாம் ;

*(iii)* தீர்ப்புக் கடன் கொடுநர் இனங்காட்டு இலக்கம் என்பது, ஒன்றில் 'தேசிய அடையாள அட்டை இலக்கமாக (தே. அ. அ.) அல்லது 'கடவுச்சீட்டு இலக்கமாக' (க. சீ. இ.) அல்லது 'வியாபாரப் பதிவு இலக்கமாக' வி. ப. இ. இருக்கலாம் ;

*(iv)* பெயரானது, தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச்சீட்டில் தோன்றுகின்றவாறான முழுப்பெயராக அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழிலுள்ள கூட்டிணைப்புப் பெயராக இருத்தல் வேண்டும் ;

*(v)* தீரப்புக் கடன்பெறுநர் என்பது, ஒன்றில், 'தனிப்பட்டதாக' அல்லது 'ஒழுங்கமைப்பாக' இருக்கலாம் ;

*(vi)* தீர்ப்புக் கடன்பெறுநர் இனங்காட்டு இலக்கம் என்பது, இடாப்பின்மூலம் (க. த. ப.) வழங்கப்படுதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக :-

"திருத்தம்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும் :-

(i) பதிவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர்கள் இனங்காணப்படுமிடத்து ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரை நீக்கிவிடுதல் ;

(ii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரொருவரைச் சேர்த்தல் ;

(iii) பதிவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடனாளிகள் இனங்காணப்படும்போது எவரேனும் கடனாளியை நீக்கிவிடுதல் ;

(iv) கடனாளியொருவரைச் சேர்த்தல் ;

(v) துணைமைப் பொருளை நீக்கிவிடுதல் (விட்டுவிடுதல்) அல்லது சேர்த்தல் ;

(vi) கடனாளியின் பெயரை மாற்றுதல் ;

(vii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயரை மாற்றுதல் ;

(viii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரினால் சாட்டுதல் செய்யப்படுதல் ;

(ix) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரினால் கீழ்நிலைப்படுத்தப்படுதல் ;

(x) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் அக்கறையை மாற்ற அடைமானம் செய்தல் ;

(xi) ஒரு கடனாளியின் அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரியைத் திருத்துதல் ;

(xii) அப்போதைய பிணைப்பொறுப்பு அக்கறையினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையை மாற்றுதல்.

"ஆரம்ப அறிவித்தல்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 11 ஆம், 12 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி கோப்பிடப்பட்டவோர் அறிவித்தல் என்று பொருளாகும் ;

"உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் இடாப்பு" என்பது 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுக, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கடன் தகவல் பணியகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கடன் தகவல் பணியகத்தினால் பேணப்பட்ட இடாப்பு என்று பொருளாகும்.

8- 537

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.